1974–75 மற்றும் 1975–76 ஆம் ஆண்டுகளுக்கான தமிழக அரசின் கணக்குகள் மற்றும் அவ்வாண்டுகளுக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் சிவில் துறைகள் பற்றிய அறிக்கைகளில் சில துறைகள் தொடர்பான குறிப்புகள் மீதான மேற்படி குழுவின் அறிக்கை (பகுதி-2) (ஆறாவது அறிக்கை);

1975–76 ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப்பெற்ற மானியக் கோரிக்கைகளுக்கும் சாட்டப்பெற்ற நிதி ஒதுக்கீடுகளுக்கும் கூடுதலாகச் செலவழித்த தொகைகள் பற்றிய மேற்படி குழுவின் அறிக்கை (ஏழாவது அறிக்கை).

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்:—

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1974–75, 1975–1976 ஆம் ஆண்டுகளுக்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கைகளின் மீதான மேற்படி குழுவின் அறிக்கை (இரண்டாவது அறிக்கை);

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மீதான மேற்படி குழுவின் அறிக்கை (மூன்றாவது அறிக்கை);

1972–73 முதல் 1975–76 வரையிலான ஆண்டுகளுக்கான தமிழ்நாடு மின்வாரியத்தின் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கைகள் பற்றிய மேற்படி குழுவின் அறிக்கை (நான்காவது அறிக்கை);

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1970–71 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் கண்டுள்ள தமிழ்நாடு மின்வாரியம் தொடர்பான குறிப்புகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் (1974–75) இரண்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் அறிக்கை (ஐந்தாவது அறிக்கை).

3. அரசினர் சட்ட முன் வடிவுகள்

(அ) தனிக் குடியிருப்புப் பகுதி உடைமை உரிமைச் சட்ட முன்வடிவு, 1981

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு தனிக்குடியிருப்புப் பகுதி உடைமை உரிமைச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

1981 பிப்ரவரி 12]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

4. அமைச்சரவையின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம், விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, நேற்றைய தினம் பேசியதை ஒட்டி அரசின் சார்பாக மேலும் சில கருத்துக்களை அவைமுன் வைக்க விரும்புகிறேன்.

வேலை நிறுத்த காலங்களை இந்த அரசு நீட்டிக்கிறது, விரைவிலே ஒப்பந்தம் செய்வதில்லை, அதனால் தொழிற்சங்க இயக்கமே பாழ்பட்டு விடுகிறது, அதனால் பலர் வேலையிழந்து விடுகின்றனர் என்றெல்லாம் குற்றச்சாட்டுக்கள் சொல்லியதற்காக அதன் நிலைமையை எடுத்துச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தொழிலாளர் பிரதிநிதிகளும், தொழில் அதிபர்களும் ஆக இரு சாராரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் எடுக்கின்ற முயற்சியில் வெற்றி பெறுவோமேயானால் அது விரைவிலே முடிந்துவிடுகின்றது. இல்லை என்றால் நாட்கள் ஆகின்றன. அது சில நேரங்களில் ஒத்துழைப்பு இல்லாத காரணத்தால் தவிர்க்க முடியாததாக ஆகிவிடுகிறது என்பதையும் எடுத்துச் சொன்னேன். அது மட்டும் அல்ல, மேற்கு வங்காளத்தைச் சிறந்த அரசு என்றும், அந்த அரசு செய்திருக்கும் சில காரியங்களைப் பார்த்து நாங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற முறையிலே அந்த முதல்வர் செய்த சில செயல்களை எடுத்து மாண்புமிகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் சொன்னதற்குப் பதிலாக அவர்கள் மீது நாங்கள் வைத்திருக்கும் மதிப்பை எந்த வகையிலும் குறைக்க விடாமல், குறைபட்டு விடாமல், அந்த மாநிலத்திலேயே எப்படி அதிக நாட்கள் வேலை நிறுத்தம் நடைபெற்றிருக்கிறது என்பதையும், 8 மாதங்கள் வரையில் கூடத் தொடர்ந்து நடைபெற்றிருக்கிறது என்பதையும் எடுத்துச் சொன்னேன்.

இந்தக் கண்டனத் தீர்மானத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்களும் கலந்துகொண்டு பேசினார்கள். அதே குற்றச்சாட்டை—ஆனால், அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கே உரிய பாணியில் எடுத்துச் சொன்